# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● அக்டோபர் 8 2022 Weekly E-paper ● October 8, 2022




## ராமராஜ்யத்தின் ‘டிரைலர்’ ஓடுகிறதோ?

சுப.வீரபாண்டியன்

### அப்போது வரும் மதுரை எய்ம்ஸ்?!

தம்பி பிரபு

### ஆணை இருக்கிறது, நடைமுறையில் இல்லை!

தலையங்கம்

### பயன்பட்டால் ராஜராஜன் இல்லையெனில் கிராதகன்

காசு.நாகராசன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • அக்டோபர் 8 2022 Weekly E-paper • October 8, 2022


## ராமராஜ்யத்தின் ‘டிரைலர்’ ஓடுகிறதோ?

சுப.வீரபாண்டியன்

அண்மையில் குஜராத்தில் நடைபெற்றுள்ள ஒரு நிகழ்வு நம்மை அதிர்ச்சியில் உறைய வைக்கிறது.

தசரா விழாவின் போது சிலர் கற்களை எறிந்து கலவரம் செய்ததாக ஒரு குற்றச்சாட்டு. உடனடியாக அந்தச் செயலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரண்டு இளைஞர்களைச் சிலர் பிடித்துக் கம்பத்தில் கட்டி வைக்கின்றனர். பிறகு பொதுமக்கள் முன்னிலையில் அந்த இளைஞர்களைக் கடுமையாகத் தடி கொண்டு தாக்குகின்றனர். இந்தக் காணொளிக் காட்சி இப்போது நாடெங்கும் விரைந்து பரவிக் கொண்டிருக்கிறது.



விசாரணையின் போது அந்த இளைஞர்கள் இஸ்லாமியர்கள் என்பதும், தாக்கியவர்கள் காவல்துறையினரும், ஒரு மதவெறி இயக்கத்தினரும் என்பதும் தெரிய வருகிறது. இதுவரை இந்தியாவில் இப்படி நடந்தது இல்லை. அவர்கள் கலவரம் செய்திருந்தாலும் அதை விசாரித்து நீதிமன்றத்தில்தானே அவர்களைக் கொண்டு போய் நிறுத்தியிருக்க வேண்டும்? தண்டிக்கும் உரிமை நீதிமன்றத்திற்குத்தானே உள்ளது?

எந்த விசாரணையும் இல்லை, எந்த நீதிமன்றமும் இல்லை, தெருவில் மக்கள் முன்னிலையில் தண்டனை வழங்கப்படுகிறது என்றால், இது என்ன நியாயம்? நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது? இதுதான் ராமராஜ்யமா என்று கேட்கத் தோன்றுகிறது.

இப்படி ஒரு காட்டு தர்பாரை நோக்கி நாட்டில் நிர்வாகம் சென்று கொண்டிருப்பது மிகுந்த வேதனை தருவதாக இருக்கிறது. இன்று குஜராத், நாளை எந்த மாநிலமாகவும் இருக்கலாம்.

தமிழ்நாட்டிலும் கூட ஓர் அதிர்ச்சியான செயல் நடைபெற்றுள்ளது. மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் முருகன் என்னும் ஒரு காவலர் தன் இடமாற்றத்தை எதிர்த்து வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

அவர் மேல் அதிகாரிகளின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிவதில்லை என்றும், முன் அனுமதி இல்லாமல் அடிக்கடி விடுமுறையில் சென்று விடுகிறார் என்றும் அவர் மீது குற்றச்சாட்டு. அதனால் அவர் மதுரையில் இருந்து தூத்துக்குடிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அதனை எதிர்த்துத்தான் அவர் வழக்கு தொடர்ந்து உள்ளார்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஸ்ரீமதி, கர்மா அடிப்படையில் தீர்ப்பு வழங்குவதாகக் கூறியுள்ளார் சஞ்சித கர்மா,பிராப்த கர்மா என இரண்டு விதமான கர்மாக்கள் உள்ளன என்றும், பிராப்த கர்மாவின் அடிப்படையில் அவர் ஏற்கனவே தண்டனை பெற்றுவிட்டார் என்றும் கூறி அவருடைய இட மாற்றத்தை நீதிபதி ரத்து செய்துள்ளார்.

இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற மேல்முறையீட்டில், கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மிகவும் தவறானது என்று கண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுமக்கள் முன்னிலையில் மத வெறியர்கள், காவல்துறை என்னும் பெயரில் தண்டனை வழங்குவதும், கர்மாவின் அடிப்படையில் நீதிபதி தீர்ப்பு வழங்குவதும் நாட்டின் சரிவை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

ராம ராஜ்யத்தின் டிரைலரே இவ்வளவு மோசமானதாக இருந்தால், திரைப்படம் எவ்வளவு வன்கொடுமை உடையதாக இருக்கும் என்பதை நம்மால் உணர முடிகிறது! ●

## சீமானின் திடீர்ப் பாசம்



திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வந்த சுப்புலட்சுமி ஜெகதீசன், சென்ற மாதம் அப்பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். தன் உடல் நலம், வயது ஆகியனவற்றின் காரணமாகத் தான் பொறுப்பில் நீடிக்க விரும்பவில்லை என்றும், உறுப்பினராகத் தொடர்வேன் என்றும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

திமுகவில் ஏதேனும் சலசலப்பு வராதா, கலங்கிய குட்டையில் தான் ஏதேனும் மீன்பிடிக்க முடியாதா என்று காத்திருந்த சீமான் இப்போது ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பினர் சுப்பக்கா என்று அன்பாக அழைத்ததன் பொருள் இப்போதுதான் அவருக்குப் புரிந்திருக்கிறதாம். அப்படியே பாசம் பொங்கியெழ ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார்.

“நீங்கள் வெளியில் வந்ததால் திமுகவிற்குத்தான் நட்டம். திமுக கைவிட்டாலும், உங்களை உங்கள் மகனாகிய நான் எப்போதும் கைவிட மாட்டேன். உங்களுக்குத் துணை இருப்பேன்” என்று கண்ணீர் மல்கக் கதறி அழுதிருக்கிறார்.

அடடா, எவ்வளவு பாசம்! இந்த மகன் இவ்வளவு நாள் எங்கிருந்தார்? புலிகள் சுப்பக்காவின் மீது வைத்திருந்த பாசம் இவ்வளவு நாள் இவருக்கு எப்படித் தெரியாமல் போயிற்று? எல்லாம் வேடம்!

திமுகவிற்குள் ஏதேனும் குழப்பம் விளைவித்தால் எஜமானர்களின் பாராட்டைப் பெற்றுவிடலாம் என்கிற நப்பாசை!

சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் புலிகளை ஆதரித்து, அதனால் தடா சிறையில் அடைக்கப்பட்டு வெளிவந்தவுடன், நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட அவருக்கு வாய்ப்பு அளித்தது திமுகழகம்தான். புலிகளை ஆதரித்தார் என்பதற்காக அவரைத் திமுக புறம் தள்ளவில்லை.

இப்போதும் அவருக்கு ஏதேனும் மனக்கசப்பு ஏற்பட்டிருக்குமானால், அதை அவர் கட்சித் தலைமையோடு பேசிச் சரி செய்து கொள்வார். சீமான் அவருக்காக மிகவும் கவலைப்பட்டுத் தன் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம்! ●

# அப்போது வரும் மதுரை எய்ம்ஸ்?!

## தம்பி பிரபு

"கடந்த 8 ஆண்டுகளில், நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் வளர்ச்சித் திட்டங்கள் சென்றடையும் வகையில் நாங்கள் பணியாற்றி வருகிறோம்" - இமாச்சல மாநிலம், பிலாஸ்பூர் மாவட்டம் எய்ம்ஸ் மருத்துவமனையைத் திறந்து வைத்துப் பிரதமர் பேசிய பேச்சின் ஒரு வரி இது. கூசாமல் பொய் பேசுகிறார் பிரதமர்.

பிலாஸ்பூர் எய்ம்ஸ் அடிக்கல் நாட்டப்பட்ட அதே ஆண்டில்தான் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது. இன்னும் மதுரை எய்ம்ஸ், பொட்டல் காடாகவே காட்சியளிக்கிறது. பிரதமரின் பேச்சில் குறிப்பிடும் "நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்குமான வளர்ச்சி" என்பது அவரது வழக்கமான 'உருட்டல்' என்பது மதுரை எய்ம்ஸ் பொட்டல் காட்டைப் பார்ப்பவர்களுக்குப் புரியும். எனவே அவர் பேச்சில் உண்மையில்லை. பொய்களின் சாட்சியாகத் திகழ்கிறார்கள் மோடியும் அவரது அடிப்பொடிகளும் என்பது வெட்ட வெளிச்சமாகிறது.

"வடக்கு வாழ்கிறது,

தெற்கு தேய்கிறது"

என்று சும்மா சொல்லவில்லை பேரறிஞர் அண்ணா.

தெற்கு தானாகத் தேய்வதில்லை. தேய்க்கப்படுகிறது. வடக்கின் ஆதிக்கத்தால் ஆரம்பம் முதலே தெற்கு தொடர்ந்து தேய்க்கப் பட்டுக் கொண்டு இருக்கிறது. ஆனால் நம் வரிப்பணம் மட்டும் சுரண்டப்படுகிறது.

இந்திய நாட்டின் மாநிலங்களில் தன் தனித்த அடையாளங்களோடு கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், மனிதவளம் என அனைத்திலும் முன்னேறிய மாநிலமாக ஆகியுள்ளது தமிழ்நாடு. நாம் செலுத்தும் வரிப்பணத்தைக் கூட மற்ற வட மாநிலங்களில் முதலீடு செய்துவிட்டு நமக்குச் சட்டப்படி வரவேண்டிய GST பங்கைக் கூட முழுமையாகத் தராமல் இழுத்தடிக்கிறது ஒன்றிய அரசு.

அதுமட்டுமன்றி ஒன்றிய அரசின் திட்டங்கள் அனைத்திலும் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகிறது. வேண்டுமென்றே வஞ்சிக்கப்படுகிறோம். ஒன்றிய



பிலாஸ்பூர் மதுரை

அரசின் ஓரவஞ்சனைக்கு ஆகச் சிறந்த உதாரணமாக மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டும்(?) பணிகள் விளங்குகிறது.

பிரதமர் மோடி கடந்த 2019ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் தேதி மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். தோப்பூரில் 222 ஏக்கர் நிலம் மாநில அரசால் மத்திய சுகாதாரத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது.

அதன் பின் நடந்து வரும் பணிகள் குறித்துச் சொல்ல வேண்டிது இல்லை, ஊரே அறியும். அடித்தளமே கட்டாமல் மொட்டைமாடிக்குப் படிக்கட்டு கட்டுகிறேன் என்பதுபோல கட்டடமே கட்டாமல் வெறும் சுற்றுச்சுவர் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. அதுவும் குட்டிச்சுவராக ஆனதுதான் மிச்சம்.

நிலைமை இவ்வாறிருக்க.. தமிழகம் வந்த பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா "எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க 1,264 கோடி ஒதுக்கப்பட்டது... அதை மதுரையில் கட்ட நினைத்தோம். உங்கள் உதவியால் நாங்கள் அதில் வெற்றி பெற்றோம். இன்று எய்ம்ஸின் 95% பணிகள் முடிவடைந்துள்ளன. அது பிரதமரால் விரைவில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும்" என்று பாஜகவின் பல்துறை வல்லுநர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் பெருமையாகச் சொன்னார். அதை பாஜக தலைவர் அண்ணாமலையும் கைதட்டிப் பாராட்டினார். ஆனால் அவரின் பேச்சு அனைத்து ஊடகங்களிலும் நகைப்புக்கு உள்ளானது.

வடநாட்டு அப்பாவி மக்களிடம் பொய் சொல்லி ஏமாற்றுவதைப் போல, தமிழகத்து மக்களையும் நினைத்திருக்கிறார்கள். ஏதாவது சொல்லி வைப்போம், நம்பினால் நம்பட்டும் என குருட்டாம் போக்கில் அடித்து விடுவது அவர்களின் வேலை. தமிழக மக்களிடம் அந்த வேலை எப்போதும் எடுபடாது, தெரு முக்கு கூட தாண்ட முடியாது என்பதுதான் வரலாறு. ஜே.பி.நட்டாவுக்கு இதை யாரும் சொல்லவில்லை போல, பாவம்!

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் "எய்ம்ஸ் செங்கல்" தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து பெரும் ஆரவாரத்தைக் கிளப்பியதோடு, அதுவே கடந்த ஆட்சியை அகற்றும் பல காரணிகளில் ஒன்றாக அமைந்தது.

நாட்டின் சொத்துக்களை எல்லாம் விற்றுத் தீர்க்கும் மோடி அரசு, மதுரை எய்ம்ஸ் ஒற்றைச் செங்கலால் 2024ஆம் ஆண்டில் மக்களால் ஆட்சி மாற்றம் ஏற்படும். அப்போதுதான் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையைப் பற்றி நாம் நினைக்க முடியும்! ●





# தோழர் உமா இல்ல இணையேற்பு விழா



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கொள்கைப் பரப்புச் செயலாளர் தோழர் உமாவின் மகள் இலக்கியா – கவுதமன் இணையேற்பு விழா 02-10-2022 அன்று கோவில்பட்டியில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் கீதாஜீவன் தலைமை தாங்கினார். தோழர்கள் பொள்ளாச்சி மா. உமாபதி, ஆ.சிங்கராயர் உள்ளிட்டோர் முன்னிலையில் தோழர் உமா அனைவரையும் வரவேற்றார். இணையேற்பு விழாவைப் புலவர் ந.செந்தலைக் கவுதமன் நடத்தி வைத்தார். மணமக்களைப் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தோழர் ஓவியா உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர். நிகழ்ச்சியைத் தோழர் சிற்பி செல்வராசு தொகுத்து வழங்கினார்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஆணை இருக்கிறது, நடைமுறையில் இல்லை!




இந்திய ஒன்றியம் என்பது மதச்சார்பற்ற நாடு என்பதை நேர்மையுள்ள அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

இங்கு பல்வேறு மொழிகள், இனங்கள், பண்பாட்டுக் கூறுகள், வெவ்வேறு மதம் சார்ந்தவர்கள் வாழ்கின்றனர். என்றாலும், மதவேறுபாடுகளைக் கடந்து இணக்கமுடன் அவர்கள் வாழ்ந்து வருன்றனர். இதனைச் சீர்குலைக்கும் சக்திகளும் இல்லாமல், இல்லை.

அனைத்துத் தரப்பு மக்கள் வரிப்பணத்தில் இயங்கி வரும் அரசு அலுவலகங்கள் மத வேறுபாடுகளைக் கடந்ததாக இருக்க வேண்டும்.

ஆனால் நிலைமை அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

29-04-1968ஆம் நாளிட்ட தமிழக அரசின் அரசாணையின் படி, அரசு அலுவலகங்களில் எந்தவொரு மதத்தைச் சேர்ந்த கடவுள்களின் படங்களோ, சிலைகளோ, மத நடவடிக்கைகளோ இருக்கக் கூடாது என்று அன்றைய தலைமைச் செயலாளர் பெயரால் ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஆணை இருந்தாலும், அது முறையாக நடைமுறைக்கு வரவில்லை என்றே தெரிகிறது.

கடவுள் படங்களுடன், ஆயுத பூசை உள்ளிட்ட இந்து வழிபாட்டுப் பூசைகள் அங்கு நடைபெற்று வருகின்றன.

இது போன்ற செயல்பாடுகள் மதச்சார்பின்மைக்கு ஊறு விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.

எந்தக் கட்சியின் ஆட்சியாக இருந்தாலும் இவை போன்றவைகளைக் களையெடுப்பது அவசியமாகும்.

குறிப்பாக அரசு அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு, நடவடிக்கைகளை எடுத்து, இது மதச்சார்பின்மை நாடு என்பதை உறுதி செய்ய வேண்டும்..

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# பயன்பட்டால் ராஜராஜன் இல்லையெனில் கிராதகன்

காசு.நாகராசன்

ரொம்ப சிம்பிள்... பார்ப்பானுக்குப் பயன்பட்டால் ராஜராஜன்..... இல்லையெனில் கிராதகன்... இதுதான் இன்றளவும் நிலவுகிறது நீடிக்கிறது. அரசியல் தலைவர்களில் பார்ப்பனர்களால் கொண்டாடப்படும் தலைவர்கள் யார்? பார்ப்பனர்களால் வெகுஜன விரோதியாகக் காட்டப்படும் தலைவர்கள் யார்? யார்? என்பதைப் பார்த்தாலே இந்த உண்மை புரிந்துவிடும்!

தலைவர் கலைஞரும் விபி சிங்கும் லாலுவும் இன்றளவும் பார்ப்பனர்களால் மிகக்கடுமையாகத் தூற்றப்படுகிறார்கள்... காரணம் என்ன? எந்தப் பார்ப்பானின் தட்டுச் சோற்றைப் பிடுங்கிக்கொண்டனர் இவர்கள்? இல்லை.... ஆனால், காலங்காலமாக உழைக்காமல் உண்டு கொழுத்துக் கொண்டிருந்த பார்ப்பன மேலாதிக்கத்தின் அதிகாரத்தில் கைவைத்தார்கள்! சூத்திரர்கள், பஞ்சமர்கள் என்று ஒதுக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த உழைக்கும் வர்க்கத்தை அதிகார பீடத்தில் அமர்த்தினார்கள்! பார்ப்பானுக்குத் தெரிகிறது யார் தங்களுடைய எதிரி என்று ? நாம்தான் பார்ப்பனர்களில் நல்லவர்களைத் தேடி மெனக்கெடுகிறோம்...

*நமக்கான வரலாறுகளை அழிக்கப், பார்ப்பான்....*
*அழிக்க முடியாதவற்றைத் திரிக்கப், பார்ப்பான்...*
*இரண்டும் முடியாதெனில் அதைத் தனதாக்கப், பார்ப்பான் ...*

மதமெனும் பேய் பிடியாதிருக்க என்ற வள்ளலாரை நேரிடையாக வசப்படுத்த முடியாத பார்ப்பனர்கள் பொள்ளாச்சி மகாலிங்கம் போன்ற சூத்திரர்களை வைத்து வள்ளலாருக்கும் விழா, ஆர்.எஸ்.எஸ்க்கும் வரவேற்பு என நாடகம் நடத்தினார்கள். ... இந்த வரலாற்று மோசடிகளை எல்லாம் தோலுரித்து, பார்ப்பன எதிர்ப்பைக் கூர்தீட்டிய இரு தலைவர்கள் புரட்சியாளர் அம்பேத்கரும் தந்தை பெரியாரும்..... அம்பேத்கரின் தொண்டர்களிடம் ஏற்பட்ட பார்ப்பன எதிர்ப்புக் கொள்கையின் வீரியக் குறைவால் இன்று அம்பேத்கரையும் சுவீகரிக்கும் முயற்சியில் தமிழ்நாட்டிற்கு வெளியே ஓயாது இயங்குகிறார்கள் பார்ப்பனர்கள்.... ஆனால், பெரியார் தொண்டர்களின் ஓயாத பார்ப்பன எதிர்ப்புக் கொள்கையால் இன்றளவும் பெரியாரை எதிர்க்குறியீடாகவே வைத்திருக்க முடிகிறது பார்ப்பனர்களால்.

வள்ளலாரையும் காந்தியாரையும் கொல்ல முடிந்த பார்ப்பனர்களுக்கு பெரியார் ஒரு பெரிய விசயமில்லைதான். .. ஆனால், அவர்கள் மீதான தாக்குதலுக்கு ஏற்படாத எதிர்வினைத் திட்டம் பெரியாரின் தொண்டர்களிடம் இருப்பதே இன்றளவும் பார்ப்பனர்களின் அச்சத்திற்குக் காரணம்....

பார்ப்பன எதிர்ப்பு என்பது ஏதோ தனிப்பட்ட ஓர் இன எதிர்ப்பன்று. .... அது ஓர் ஆதிக்க எதிர்ப்பின் அடையாளம். ... தன்மான மீட்பின் குறியீடு... சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதி ஆகியவற்றைப் பேச, செயல்படுத்தத் துணிகிற யாரும் பார்ப்பன எதிர்ப்பைப் பேசாமல் கடந்து போய்விட முடியாது.....

இன்றைய சூழலில், வகுப்புவாரி உரிமை என்கிற இட ஒதுக்கீட்டு உரிமையைப் பார்ப்பனரல்லாத சமூகத்தினரிடையே ஓங்கி முழங்குவதுதான் பார்ப்பனர்களை அம்பலப்படுத்தவும் தனிமைப்படுத்தவுமான ஆயுதமாக இருக்க முடியும். ...

எனவே, பார்ப்பனர்களால் இன்றளவும் திட்டமிட்டுப் பறிக்கப்படுகிற பார்ப்பனரல்லாதார் சமூகத்தின் கல்வி - வேலைவாய்ப்பு உரிமைகளுக்கான ஒரு தொடர் பரப்புரையை வெகுமக்களிடம் பரவலாக முன்னெடுப்பதுதான் காலத்தின் தேவையான நடவடிக்கையாக இருக்க முடியும்... உண்மையைச் சொல்லத் தாமதிப்பது கூட, பொய்கள் உலவுவதற்கான அவகாசமாகிவிடக்கூடும் ! கூடிச்சிந்திப்போம்!

# வள்ளலாரைப் போற்றிய பெரியார்!

கி.தளபதிராஜ்

*“சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே*
*சாத்திரச் சந்தடிகளிலே*
*கோத்திரச் சண்டையிலே ஆதியிலே*
*அபிமானித்தலைகின்ற உலகீர்*
*அலைந்தலைந்து வீணே நீர்*
*அழிதல் அழகலவே”*

ஜாதி,மத,சமய,சாஸ்திர,கோத்திர சண்டையில் ஈடுபட்டு அலைந்து வீணாக அழிவது அழகல்ல என்றார் வள்ளலார்.

*“நால் வருணம் ஆசிரமம்*
*ஆசாரம் முதலாநவின்ற*
*கலைச்சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே.”*

வருணம், ஆசிரமம், ஆச்சாரம் இவைகள் சொல்லுவது சிறுபிள்ளைத்தனமானது என்று சாடினார் வள்ளலார்.

*“வேதநெறி ஆகமத்தின் நெறி*
*புராணங்கள் விளம்புநெறி*
*இதிகாசம் விதித்தநெறி முழுவதும்*
*ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி*
*உள்ளதனை உள்ளபடி உணர உணர்த்தினையே!”*

வேதம், ஆகமம், புராண, இதிகாசம் இவைகள் சொல்கிற நெறிகள் அனைத்தும் சூது என உணரவைத்தாயே! எனப் பாடினார்

சங்கராச்சாரியார் “சமற்கிருதம் மாத்ரு பாஷா” (தாய் மொழி)எனக் குறிப்பிட்ட போது “தமிழ் பித்ரு பாஷா” (தந்தை மொழி) என்றுரைத்தவர் வள்ளலார்.

“நான் முதலில் சைவ சமயத்தில் லட்சியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அந்த லட்சியம் எப்படிப் போய்விட்டது பார்த்தீர்களா! அப்படி லட்சியம் வைத்ததற்குச் சாட்சி வேறே வேண்டியதில்லை. நான் பாடியிருக்கிற திருவருட்பாவில் அடங்கியிருந்த பாடலையும், மற்றவர்கள் பாடலையும் சபைக்குக் கொண்டு வந்தால் அவைகளே சாட்சி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது’ என்று பின்னாளில் குறிப்பிட்டவர் வள்ளலார்.

பெண்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டும் என்றார். கணவர் இறந்தால் பெண்கள் தாலி அறுக்கவேண்டும் என்ற சடங்கை எதிர்த்தவர் வள்ளலார். விதவை மறுமணத்தை ஆதரித்தார். தாழ்த்தப்பட்டவர்களைக் கோயில்களில் அனுமதிக்க மறுத்தபோது அனைவரும் கடவுளை வழிபடும் வகையில் சத்ய ஞான சபைகளை உருவாக்கியவர் வள்ளலார்.

இப்படி பல சீர்திருத்தக் கருத்துகளை வெளிப்படுத்தியவர் என்பதால்தான் பெரியாருக்கு வள்ளலார் மீது ஒரு மரியாதை ஏற்பட்டது. வள்ளலாரின் ஆறாம் திருமுறையைத் தனது குடிஅரசு பதிப்பகத்திலேயே வெளியிட்டு குறைந்த விலையில் மக்களிடம் கொண்டுசேர்த்தார் பெரியார்!



வெள்ளைக்காரன்,காங்கிரஸ்காரன் இன்னும் எத்தனையோ பேர் ஆண்டிருக்கிறார்கள். ஆனால் அண்ணா போன்று ‘‘கடவுள் வேண்டாம், மதம் வேண்டாம்,சாதி வேண்டாம்,சாஸ்திரம் வேண்டாம்’’ என ஒரு பகுத்தறிவு அரசாங்கத்தை யார் இந்தியாவில் அமைத்து இருக்கிறார்கள்? இது சாதாரண காரியமல்ல! பிரம்மாண்டமான சாதனையாகும். இது நம் மக்களுக்குப் புரிகிறதோ இல்லையோ எதிரிகளுக்குத் தெளிவாக புரியும்... புத்தனாலும் முடியவிலை? என்னாலும் முடியவில்லை? வாய் அளவில்தானே நாங்கள் பேசினோம். அண்ணா ஒருவர்தான் சாதித்தார்...

[ 1.11.1970 அன்று பம்பாயில் தந்தை பெரியார் ஆற்றிய உரையில் ]

முகநூல் பக்கத்திலிருந்து